# தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வுகளின் எதிர்காலம்: ஓர் ஆய்வு நோக்கு

**E.Cumaran**
***Department of Tamil**, University of Jaffna, Sri Lanka*

பிரதான சொற்கள்:*ஒப்பிலக்கியம், தமிழ் மொழி*

**ஆய்வு அறிமுகம்**

ஒப்புநோக்குவதும், ஒப்புநோக்கித் தான் கண்டறிந்தவற்றை விபரிக்கும் திறனும் மனித சமுதாயத்துக்குக் கிடைக்கப் பெற்ற பேராற்றல் என்றே குறிப்பிடலாம். இப் பேராற்றல் ஆய்வு வரன்முறைகளுக்கு உட்பட்ட ஒன்றாக வளர்ச்சி கண்டபோது ஒப்பியலாய்வு தோன்றியது. இன்று இலக்கியம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம் முதலான அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமித்துக் கொண்ட ஓர் ஆற்றல் மிக்க ஆய்வுச் செயற்பாடாக ஒப்பிலாய்வு முனைப்புப் பெற்றிருப்பதனைக் காணலாம்.

ஒன்றோடொன்று தொடர்புபட்டிராத இருவேறு மொழி இலக்கியங்களுக்கிடையிலான ஒற்றுமையினையும் தனித்துவங்களையும் ஒப்பிட்டு நோக்குவதே ஒப்பிலக்கிய ஆய்வாகும். தமிழினைப் பொறுத்தமட்டில் இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்கிக் கருத்துரைக்கும் பண்பு பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே காணப்பட்ட போதும் இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலிருந்தே ஆய்வு முறையியலுக்குட்பட்ட ஒன்றாக அது வளர்ந்தது.

தமிழில் ஒப்பிலக்கியம் பற்றிய ஆய்வுகளின் எதிர்காலம் குறித்து இன்று பல கேள்விகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வு முயற்சிகளை ஆரம்பித்தவர்கள் காலனித்துவ ஆட்சிச் சூழலில் மேலைத்தேயத்தில் இருந்து இங்கு வந்து நிர்வாகப் பணியாற்றியோரும் பாடசாலைகளில் கல்விப் பணிபுரிந்த மேலைநாட்டினருமே. இவர்களது எழுத்து முயற்சிகளில் ஈடுபாடு கொண்டும் அவற்றினை ஆதர்சமாகக் கொண்டுமே பிற்காலங்களில் தமிழ் அறிஞர்கள் ஒப்பியல் இலக்கிய முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர். இதனால் அன்று ஆரம்பித்த காலனித்துவப் பார்வை இன்றும் ஒப்பியலாய்வுகளில் இருந்தும் முற்றிலும் நீங்கவில்லை என்றே ஆய்வாளர்கள் கூறியுள்ளனர் (Susan Bassnett 1998. pp.70 – 91). இதனால் காலனித்துவப் பார்வையை முற்றிலுமாக நீக்கிய ஒப்பியல் பார்வையொன்றினை வளர்த்தெடுக்கும் தேவையொன்று உருவாகியுள்ளது.

2. மனிதப் பொதுவான சிந்தனைகள் இலக்கியங்களில் ஒற்றுமையை ஏற்படுத்தினாலும் குறிப்பிட்டதோர் இலக்கியம் தோன்றிய சமூக, பண்பாட்டு, பொருளாதாரச் சூழல்கள் அதில் தனித்தன்மைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. இத் தனித்தன்மைகளே குறிப்பிட்ட சமூகத்தின் அடையாளங்களாகவும் இருப்பதனைக் காணலாம். இலக்கியங்களில் உள்ள பொதுத் தன்மைகளை மட்டுமே விதந்து பேசுவதென்பது இனக் குழுமங்களின் அடையாளங்களை மறுதலிப்பதற்குக் காரணமாக அமையக் கூடும் என ஆய்வாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர் (Stphen H. Arnold 1989, ப. 82 – 93) . அதிலுங் குறிப்பாக தனித்துவங்களைப் பாராமுகப்படுத்துவது உலகமாயமாதல் சிந்தனைகள் போன்றவற்றுக்கு உரங்கொடுத்து இனங்களின் தனித்துவங்களை அழிப்பதற்குக் காரணமாகிவிடலாம் என்றோர் அச்சமும் ஏற்பட்டுள்ளது. இதனால் பண்பாட்டுத் தனித்துவங்களைப் பேணிப்பாதுகாக்கக் கூடிய முறையிலான ஒப்பிலக்கிய ஆய்வின் தேவைகுறித்துச் சிந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

3. காலனித்துவ காலத்திலிருந்து பெரும்பாலான ஆய்வுகள் மேலைத்தேய, கீழைத்தேய இலக்கியங்களை ஒப்பிட்டே நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன. அதனால் பழமையும் தொன்மையுமிக்கதாகிய தமிழ் உள்ளிட்ட கீழைத்தேய மொழிகளுக்கிடையிலான ஆய்வுகள் பெருமளவுக்குப் புறந்தள்ளப்பட்டுள்ளன. இதனால் கீழைத்தேய இலக்கியங்கள் முழுமையாக வெளியுலகுக்குக் கொண்டுவரப்படாமல் இலைமறைகாயாகவே இருக்கும் அவலம் இன்றுந் தொடர்கின்றது (ஆனந்தகுமார் பா 2003, ப.34). இலக்கிய உலகில் கீழைத்தேய இலக்கியங்கள் மற்றும் இலக்கிய கர்த்தாக்களின் பங்களிப்புக்களை வெளிக் கொணரும் வகையில் ஒப்பியலாய்வினை

மேம்படுத்துதல் குறித்து சிந்திக்கவேண்டிய நிலையில் தமிழ் உள்ளிட்ட கீழைத்தேய மொழிகள் உள்ளன.

4. பல்லின, பலமொழிகளைப் பேசும் நாடுகளில் அந்நாட்டு மொழிகளுக்கிடையிலான ஆய்வுக்களங்கள் இன்னும் முழுமையாகத் தொடப்படாமலே இருப்பது விசனத்துக்குரியதொன்றாகும்.

5. அதேபோல இனங்களுக்கிடையிலான அல்லது மொழிக் குழுமங்களுக்கிடையிலான ஒற்றுமையினையும் பரஸ்பர கொடுத்தல் வாங்கல் உறவுகளையும் மேம்படுத்தக் கூடிய வகையிலான ஒப்பியல் ஆய்வுகளைத் திட்டமிடுதலும் இன்று மிக முக்கிய தேவையாக உள்ளது.

தமிழ் மொழியையும், தமிழ் மொழி இலக்கியங்களையும் உலக இலக்கியங்களுடனும் பண்பாட்டுடனும் பொருத்திப்பார்க்க உதவும் ஒப்பியலாய்வினை மேலே எடுத்துக்காட்டப்பட்ட தடைகளையும் தாண்டி எங்ஙனம் வளர்த்தெடுப்பது என்பது குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் பிரதானமான நோக்கமாக அமைகின்றது.

**ஆய்வு முறையியல்: (Methodology)**

இந்த ஆய்வு விவரண ஆய்வு முறையியலுக்கமைவாகச் செய்யப்படுகின்றது.

1. தமிழ்ச் சூழலில் கடந்த காலங்களில் நிகழ்ந்ததும் தற்போது நிகழ்ந்து வருகின்றதுமான ஒப்பிலக்கிய ஆய்வுகள் குறித்த தகவல்களைத் ஒருங்கு திரட்டுதல். அவற்றினைப் பரிசீலனைக்குட்படுத்துதல்.
2. ஒப்பிலக்கிய ஆய்வுகளுக்கும் சமகாலத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கும் இடையில் காணப்படும் இடைவெளியினை இனங்காணல்.
3. இதன் பின்னணியில் எதிர்காலத்தில் ஒப்பிலக்கிய ஆய்வுகளை எங்ஙனம் வளர்ப்பது என்பது பற்றிய வழிமுறைகளைப் பிரேரித்தல்.

என்னும் ஒழுங்கு முறையில் இந்த ஆய்வானது நகர்த்தப்படுகின்றது.

**சுருக்கமும் முடிவும்**

எதிர்காலத்தில் தமிழ்ச் சூழலில் ஒப்பிலக்கிய ஆய்வுகளை நிகழ்த்த விரும்புவோர் பின்வரும் விடயங்களில் அதிக கரிசனை செலுத்த வேண்டியவராயுள்ளனர்.

1. மேலைத்தேய இலக்கியங்களுக்கிடையிலான ஒப்பிலக்கிய ஆய்வினைச் செய்யும் அதேவேளை கீழைத்தேய மொழிகளுக்கிடையிலான ஒப்பியலாய்வினையும் மேம்படுத்துதல் வேண்டும். இதன் மூலம் கீழைத்தேய மொழிகளுக்கிடையிலான ஒப்பியலாய்வுகள் புறந்தள்ளப்படுவதாகவும், அதனால் அம்மொழி இலக்கியங்களின் தனித்துவமும் சிறப்பும் தொடர்ந்தும் இலைமறைகாயாகவே இருப்பதாகவும் சுமத்தப்பட்டு வரும் விமர்சனங்களில் இருந்துவிடுபட்டுக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது (Susan Bassnett 1998, P. 70 – 91)

2. ஒப்பிலக்கிய ஆய்வுகளின் சமூகப் பங்களிப்பென்பது இன, மத, மொழி, பிரதேசத் தனித்துவங்களைக் கட்டிக்காப்பதுடன் அவற்றைக் கடந்து ஓர் ஒற்றுமையினையும் வளர்த்தெடுப்பதாக இருக்க வேண்டும். பல்லினங்களையும் பலமொழிகளையும் பேசும் மக்கள் வாழும் நாடுகளில் இத்தகைய ஆய்வுகள் முன்னெடுக்கப்படும் போது ஒற்றுமையுணர்வும் தேசியப்பண்பும் புரிந்துணர்வும் கட்டியெழுப்பப்படும் எனக் கருதலாம்.

3. ஒப்பிலக்கிய ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இலக்கியம் தொடர்பான கருத்துக்கள் தமிழ்ப் படைப்பாளிகளின் படைப்பாக்கத் திறனினையும் வாசகர்களின் வாசிப்புத் திறனினையும் உலக இலக்கியத் தரத்திற்கு இணையானதாக மாற்றமுறச் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.உலக இலக்கியத் தரம் என்பது உலகிலுள்ள எந்தவொரு வாசகனதும் ஏற்புணர்வுக்கும், புரிதலுக்கும் ஏற்றவகையிலான இலக்கியப் படைப்பாக்கத்தினைக் குறித்து நிற்கின்றது.

4. இலக்கியங்களுக்கிடையிலான ஒற்றுமைகளையும் தனித்துவங்களையும் இனங்காட்டும் அதேவேளை ஒவ்வொரு மொழியும் தனது இலக்கிய முயற்சிகளைச் சுயவிமர்சனப்படுத்திக் கொள்ள ஒப்பியலாய்வாளர்கள் உதவுதல் வேண்டும். சுய விமர்சனப்படுத்துவதனூடாகவே குறிப்பிட்ட ஒரு மொழி இலக்கியங்களில் உள்ள பலங்களையும் பலவீனங்களையும் புரிந்து கொள்ள முடியும். இதனடிப்படையில் எதிர்காலத்தில் தரமான படைப்பாக்க முயற்சிகளை எப்படி மேற்கொள்ளலாம் எனத் திட்டமிடலாம்.

5. இலக்கிய மொழிபெயர்ப்பின் வளர்ச்சிக்கு ஒப்பிலக்கிய ஆய்வுகள் ஆதாரமாக அமைய வேண்டும் எனக் கருதப்படுகின்றது (சச்சிதானந்தன். வை 1985, பக்.166 - 168). ஒப்பிலக்கிய ஆய்வுகளின் இறுதியும் முதன்மையானதுமான வளர்ச்சி இலக்கிய மொழிபெயர்ப்பாகவே அமைய வேண்டும் என்பதே நவீன ஒப்பிலக்கிய நோக்காக உருப்பெற்றுள்ளது.

ஒப்பியலிலக்கியத்தினை, காலங்காலமாக நிலவி வந்த இலக்கிய ரசனை, இலக்கிய அனுபவம் என்னும் தளங்களுக்கு அப்பால், இன்றைய தேவைகள், சமூக எதிர்பார்ப்புக்கள் என்பவற்றிற்கிணங்க வளர்த்தெடுக்க வேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. காலத்தின் தேவை அறிந்து புதிய சமூக எதிர்பார்ப்புகளுக்கிணங்க ஒப்பியலிலக்கிய ஆய்வுகளை முன்னெடுப்பது அவசியமானதாகும். அதுவே ஒப்பியலிலக்கியத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஆதாரமாக அமையும்.

**உசாத்துணைகள்**

Susan Bassnett. 1998. *Comparative literature – A critical introduction*, London, Oxford University Press.

Stphen H. Arnold. Compartive African literary studies: A new discipline. *In*: Chandra Mohan(ed.) *Aspects of comparative literature*, New Delhi, India Publishers & Distributers,

ஆனந்தகுமார், பா. *இந்திய ஒப்பிலக்கியம் (சூசன் பாசுனெட்டை முன் வைத்து)*, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம்.

சச்சிதானந்தன். ஐவ. *ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம்*, சென்னை, ஆக்ஸ்போட் யூனிவேஸிட்டி பிரஸ்,